# வாழை

1. கிழங்கு துளைக்கும் கூன் வண்டு

(காஸ்மோபொலைட்டஸ் சார்டிட்டஸ்):

**சேதத்தின் அறிகுறி:**

- வண்டுகளும் புழுக்களும் மண்ணுக்கடியில் வாழைக் கிழங்குகளைத் துளைத்து சேதப்படுத்தியிருக்கும்
- கிழங்குகளில் சுரங்கப்பாதை போன்ற அறிகுறிகள் காணப்படும்
- தீவிர தாக்குதலாயின் மரமே வாடிப்போகும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டைகள்: வெள்ளை நிறமாகவும், வண்டுகள் முட்டைகளை தனித்தனியாக இடும். முட்டைகள் கிழங்கின் மேற்பகுதியில் தோன்றும்

- புழுக்கள்: மஞ்சள் களந்த வெண்மை நிறமாகவும், சிவப்பு நிற தலைகளுடனும், கால்கள் இல்லாமலும் காணப்படும்
- கூட்டுப்புழு: வெள்ளை நிறமாகவும், கிழங்குக்கு உள்ளே காணப்படும்
- வண்டு: வண்டு சிறியதாக கருமை நிறத்துடன் கொம்பு போன்ற வாய் அமைப்புடன் காணப்படும்

கட்டுப்படுத்தும் முறை:

- நடும்போது பூச்சி தாக்காத கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்
- தாக்கிய இடங்களில் மீண்டும் வாழையைப் பயிரிடாமல் மாற்றுப்பயிர் செய்ய வேண்டும்
- ரொபஸ்டா, கர்பூரவள்ளி, மால்போக், சம்பா மற்றும் அடுக்கர் ஆகிய இரகங்களை பயிர் செய்வதை தவிர்க்க வேண்டும்

- பூச்சி தாக்குதல் குறைவாக காணப்படும் இரகங்களான பூவன், கதலி, குன்னன், பூம்காளி போன்றவற்றை நடலாம்
- காஸ்மோலியூர் பொறியை எக்டர்க்கு 5 என்ற கணக்கில் வைக்கலாம்
- தண்டை சிறுசிறு துண்டுகளாக வெட்டி குவியலாகப் போட்டு வைத்து, வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்
- கன்றுகள் நடும்போது ஒவ்வொரு குழியிலும் கார்போஃபியுரான் 40 கிராம் (அ) போரேட் 5 கிராம் (அ) லின்டேன் 20 கிராம் மருந்தை ஒவ்வொரு கிழங்கிற்கும் மணலுடன் கலந்து போட்டு நட வேண்டும்

- நடுவதற்கு முன்னால் வாழைமரக்கன்றுகளை 0.1 சதவிதம் குயினால்பாஸ் மருந்தினுள் முக்கி எடுக்க வேண்டும்
- தீவிர தாக்குதலின் போது டைமித்தோயேட் (அ) பாஸ்பாமிட்டான் (அ) மிதைல் டெமட்டான் மருந்தினை தெளிக்கலாம்
- நடுவதற்கு முன்னால் ஒரு குழிக்கு ஆமணக்கு புண்ணாக்கு 250 கிராம் (அ) கார்பரில் பவுடர் 50 கிராம் (அ) போரேட் 10 ஜி 5 கிராம் இடுவதால் இப்பூச்சியின் தாக்குதலை தடுக்கலாம்

2. தண்டு துளைப்பான், ஒடாய்போரஸ் லாங்கிகோலிஸ் சேதத்தின் அறிகுறி:

    - தண்டுப்பகுதியில் வண்டுகள் துளைத்த துளைகள் காணப்படும்

- வெட்டப்பட்ட துவாரங்கள் தண்டின் வெளிப்புறத்தில் தோன்றும்
- துளையிட்ட பகுதிகள் அழுகுவதால் தண்டுகள் பெலவீனமாகிவிடும்
- ஆரம்பத்தில் தண்டிலிருந்து சாறு வெளியேறும்
- மரங்கள் வாடிப்போகும்

பூச்சியின் விபரம்:

- முட்டைகள் மஞ்சள் களந்த வெண்மை நிறமாகவும், உருளை வடிவாகவும் காணப்படும்
- புழுக்கள் கால்களற்றும், வெண்ணிற உடலும் பழுப்பு நிற தலையும் கொண்டதாக காணப்படும்
- தாய்வண்டு கூன்வண்டுகள் சிவப்பு கலந்த கருநிறமாக காணப்படும்

கட்டுப்படுத்தும் முறை:

- அவ்வப்போது காய்ந்த இலைகளை அப்புறப்படுத்தி, நிலத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்
- ஒவ்வொரு மாதமும் பக்க கன்றுகளை நிக்கவும்
- தாக்குதலை வராமலிருக்க நல்ல கன்றுகளை நடவும்
- பூச்சி தாக்கிய தண்டுகளை குப்பைக்குழியில் கொட்டக்கூடாது
- தாக்கிய மரங்களை வேருடன் பிடுங்கி, துண்டுகளாக வெட்டி எரித்துவிடவும்
- மோனேபகுரோட்டோபாஸ் 36 எஸ்.எல் 0.03 சதவிதம் தெளிக்கலாம்
- 50 மி.லி மோனேபகுரோட்டோபாஸ் மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து, அதிலிருந்து 4 மி.லி எடுத்து தண்டினுள் ஊசிமூலம் செலுத்த வேண்டும். தரைமட்டத்திலிருந்து மரத்தின் 45 செ.மீ

உயரத்தில் 2 மி.லி ஒரு முறையும்,

தரைமட்டத்திலிருந்து மரத்தின் 150 செ.மீ

உயரத்தில் 2 மி.லி ஒரு முறையும் செலுத்த

வேண்டும்

3.அசுவினி, பென்டலோனியா நைக்ரோநெர்வோசா:

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகள் கொத்து கொத்தாய் தோன்றும்
- இலையின் ஓரம் அலைகளை போன்றும், மேலாக சுருண்டும் காணப்படும்
- மரங்கள் வளர்ச்சி குன்றி காணப்படும்
- இலைக்கொத்து எனும் வைரஸ் நோயை பரப்புகிறது
- அசுவினி கூட்டமாக இலை இடுக்குகளிலும், தண்டுகளிலும் காணப்டும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகள் கருமையான நிறத்தில் தோன்றும்
- அசுவினியின் வெழுப்பு நிறத்திலும் , இறக்கையில் கறுப்பு நரம்புகள் போன்றும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- பயிர்செய்யும்போது நிலத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்
- பூச்சி தாக்குதல் வராமலிருக்க நல்ல கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்
- தாக்கப்பட்ட மரத்தை கிழங்கோடு சேர்த்து அழிக்க வேண்டும்
- மெத்தில் டெமட்டான் 25 இ.சி 0.05 சதவிதம் (அ) மோனேபகுரோட்டோபாஸ் 36 எஸ்.எல் 0.072 சதவிதம் தெளிக்கவும்

4. கண்ணாடி இறக்கைப் பூச்சி, ஸ்டெஃபனைட்டிஸ் டிபிகஸ்:

சேதத்தின் அறிகுறி:

- இலைகளின் கீழ்ப்புறத்தில் கூட்டம் கூட்டமாக இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் இலையின் மேற்புறத்தில் வெள்ளைப்புள்ளிகள் ஏராளமாக இருக்கும்
- மரம் வளர்ச்சி குன்றி காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகள் மஞ்சள் நிறமாகவும் இலைகளின் கீழ்ப்புறத்தில் காணப்படும்
- பூச்சி சிறியதாக பசுமை கலந்த வெள்ளை நிறத்தில் கண்ணாடி போன்ற பளபளப்பான இறக்கைகளுடன் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட இலைகள், பூக்கள், மற்றும் பழங்களை சேகரித்து அழித்துவிட வேண்டும்
- மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி (15 / எக்டர்) வைத்து அழிக்கலாம்
- டைமிதோயேட் 30 இ.சி 850 மி.லி / எக்டர் (அ) பாஸ்பாமிடான் 85 டபல்யூ.எஸ்.சி 300 மி.லி / எக்டர் தெளித்து கட்டுப்படுத்தலாம்
- மிதைல் டெமடான் 25 இ.சி 2 மி.லி / லிட்டர்(அ) மோனேபகுரோட்டோபாஸ் 1 மி.லி / லிட்டர் தெளித்து கட்டுப்படுத்தலாம்

5. கன செதில் பூச்சி, ஏஸ்பிடியோட்டஸ் டெஸ்டாக்டர்:

சேதத்தின் அறிகுறி:

- குஞ்சுகளும் பூச்சிகளும் இலைகள், தண்டு மற்றும் பழங்களை தாக்கும்
- இலைகளில் மஞ்சள்நிற திட்டுகளாக காணப்படும்

- வளர்ச்சி குன்றி காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகள் உருளையாகவும் ஒளி ஊடுரக்கூடியதாகவும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகவும் மெழுகு தடவியதுபோல் காணப்படும்
- பெண்பூச்சி வட்டவடிவாகவும், அரை ஒளி ஊடுரக்கூடியதாகவும் வெளுப்பு நிறத்துடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பகுதிகளை சேகரித்து அழித்து விடவும்
- மோனோகுரோட்டோபாஸ் 0.04 சதவிதம் மருந்தினை தெளிக்கலாம்
- பொறிவண்டுகளாகிய கைலோகோரஸ் நைக்ரிடஸ், ஸ்கிம்னஸ் காக்கிவோரா களத்தில் விடலாம்

6. பழதுரு இலைப்பேன்: (கேட்டனாபோதிரிப்ஸ் ஸிக்னிபெனிஸ்)

**சேதத்தின் அறிகுறி:**

- பழத்தின் மேற்பகுதி துருப்பிடித்தது போல் காணப்படும்
- இலைகள் மஞ்சள் நிறமாக காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- பூச்சி மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தானாக தோன்றிய தாவரங்களையும், உதாசீனப்படுத்திய தோட்டத்தையம் அழித்துவிடவேண்டும்
- நடுவதற்கு பூச்சி தாக்காத மற்றும் நல்ல கன்றுகளை தேர்வு செய்யவும்

- நடுவதற்கு முன்னால் வெண்ணீர் முக்கி எடுக்க வேண்டும்
- முன்னதாகவே குலைகளை மூடிவிடவேண்டும்
- மூடிய குலைகளுக்குள் ஏதாவது சேதம் ஏற்படுகிறதா என்பதை கண்காணிக்கவும்
- குளோர்பைரிபாஸ் மருந்தினை குலைகள், தண்டுகள் மற்றும் கன்றுகள் மீது தெளிக்கலாம்
- பைப்ரோனில் மற்றும் பைபென்த்ரின் மருந்தினை மரத்தின் அடியில் உள்ள மண்ணில் தெளிக்கலாம்
- க்ரைசோபா மற்றும் பொறிவண்டுகளை விட்டு அழிக்கலாம்

7. கம்பளிப்புழு, பேரிக்காலியா ரிசினி:

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் இலையின் பச்சையத்தை சுரண்டித் தின்னும், இலைகளில் ஜன்னல் போன்ற துளைகள் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள் கருப்பு கலந்த வெளுப்பு நிறத்தில் நீல முடிகளுடன் காணப்படும்
- பூச்சியின் முன்னிறக்கை வெளுப்பு நிறத்தில் கரும் புள்ளிகளுடன் காணப்படும். பின்னிறக்கை இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறை:**

- முட்டை குவியல்களையும், புழுக்களையும் சேகரித்து அழிக்க வேண்டும்
- கூட்டமாகக் காணப்படும் புழுக்களை தீப்பந்தம் கொழுத்தி அழிக்க வேண்டும்
- வியக்குப்பொறி அமைத்து கவர்ந்து அழிக்கலாம்

- குளோர்பைரிபாஸ் 20இ.சி (அ) குயினால்பாஸ் 25 இ.சி 2 மி.லி / லிட்டர்

8. வெட்டுப்புழு, ஸ்போடாப்டிரா லிட்யூரா:

**சேதத்தின் அறிகுறி:**

- இளம்புழுக்கள் இலைக்கு அடியில் இருந்து கொண்டு சுரண்டித் திண்ணும். பின்பு இரவு நேரங்களில் இலைகளை அதிகமாக உண்ணும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள் இளம்பச்சை அல்லது பழுப்பு நிறத்திலும், கருமையான நிறத்திலும், காணப்படும்
- பூச்சியின் முன்னிறக்கையில் வெளுப்பு நிறத்தில் தோன்றும் அதனுள் அலைபோன்ற வெள்ளை கோடுகள் தோன்றும், பின்னிறக்கையில் ஓரத்தில் பளுப்பு நிறக்கோடுகளும் வெள்ளை நிறத்திலும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- கையில் எடுத்து புழுக்களை அழிக்க வேண்டும்
- தாக்கப்பட்ட பகுதிகளை எடுத்து அழித்துவிடவேண்டும்
- கோடை உழவு செய்து கூட்டுப்புழுக்களை அழிக்க வேண்டும்
- விளக்குப்பொறி அமைத்து அழிக்கலாம்
- அசின்பரஸ்எதில் (அ) குளோர்பைரிபாஸ் (அ) மோனேபகுரோட்டோபாஸ் மருந்தினை தெளிக்கலாம்
- தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் பேஸில்லஸ் துரிஞ்சியன்ஸிஸ் மருந்தினை தெளிக்கலாம்
- டெலினோமஸ் ஸ்போடாப்டிரா, டைலினோமஸ் ரிமஸ் ஆகிய முட்டை ஒட்டுண்ணிகளை விட்டு கட்டுப்படுத்தலாம்

- நோமோரியா ரிலேயி, பூச்சிகளைக் கொல்லும் பூஞ்சாணக் கொல்லிகளை தெளிக்கலாம்